DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.68/2026

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமார் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 19.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பட்டத்தையான் குட்டையில் குடியிருந்து ஒப்பந்தம் எடுத்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன்.

கடந்த 2025ம் வருடம் நான் கொண்டம்பட்டிமேட்டில் மெஜஸ்டிக் கநகரில் கணபதி த.பெ. முத்துசாமி என்பவரது வீட்டை கட்ட ஒப்பந்தம்பேசி கட்டிடப்பணி செய்து வந்தேன். அங்கு கட்டிடவேலை செய்வதற்கு தேவையான சென்ரிங் சீட் மற்றும் இரும்பு கம்பிகள், சிமெண்ட் ஆகிய கட்டிட வேலை செய்வதற்கான பொருட்களை வைப்பதற்காக ஒரு செட் அமைத்துள்ளோம். இந்நிலையில் கடந்த 08.07.2025ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் நான் மேற்படி செட்டை பூட்டிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு அடுத்தநாள் 09.07.2025ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் நான் செட்டிற்கு சென்று பார்த்தபோது கதவு உடைக்கப்பட்டிருந்தது. செட்டில் 200 செண்ட்ரிங் சீட்டுகள் வைத்திருந்தோம் அவற்றில் சுமார் ரூ.1,35,000/- மதிப்புள்ள 90 செண்ட்ரி சீட்டுகள் மற்றும் கம்பி வெட்டும் மெசின் - 1 மற்றும் இரண்டு கம்பி வளைக்கும் ரிவர் மற்றும் இரண்டு ஆணிபார் ஆகியவற்றை காணவில்லை. அதனையடுத்து நான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம்

என்னுடையதுதான். **(**புகார் மனு அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு சுமார் ஒரு மாதம் கழித்து காணாமல்போன செண்ட்ரி சீட்டுகள் மற்றும் கம்பிவெட்டும் மெசின் ஆகியவை கிடைத்துவிட்டதாகவும், காவல்நிலையத்திற்கு வந்து அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். நான் காவல்நிலையம் சென்று காணாமல் போன எனது பொருட்களை அடையாளம் காட்டினேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள செண்ட்ரி சீட்டுகள்தான் காணாமல்போன எனது செண்ட்ரி சீட்டுகள் ஆகும். மேற்படி செண்ட்ரிங் சீட்டுகளில் RSK என குறிப்பிட்டிருக்கும். **(**செண்ட்ரி சீட்டுகள் உள்ள புகைப்படங்கள் வரிசை **- 2** அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள கம்பிவெட்டும் மெசின் தான் காணாமல்போன எனது கம்பி வெட்டும் மெசின் ஆகும். **(**கம்பி வெட்டும் மெசின் உள்ள புகைப்படம் அ**.**சா**.**ஆ**.3** ஆகவும் **BSA** பிரிவு **63(4)(c)** ன் கீழ் ஆன சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** கைப்பற்றப்பட்ட 47 செண்ட்ரி சீட்டுகளை மற்றும் கம்பிவெட்டும் மெசின் ஆகியவற்றை நான் கனம் நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து எனது இடைகால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். சாட்சி மீண்டும் 47 செண்ட்ரி சீட்டுகள் தான் காணாமல்போனதாக சாட்சியம் அளிக்கிறார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகார் மனுவை நான்தான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்து அடுத்த நாள் புகார் கொடுத்தேன். எனது புகாரில் எத்தனை செண்ட்ரிங் சீட்டுகள் காணாமல் போனதாக புகார் கொடுத்தேன் என்றால் 47 சீட்டுகள் காணாமல் போனதாக புகார் கொடுத்தேன். எனது புகாரில் 50 - 55 செண்ட்ரிங் சீட்டுகள் காணாமல்போனதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். நான் தோராயமாக எண்ணிக்கையை குறிப்பிட்டிருந்தேன்.

காணாமல்போனதற்கான செண்ட்ரிங் சீட்டுகளின் உரிமையாளர் நான்தான் என நிரூபிக்கும் வண்ணம் மேற்படி செண்ட்ரிங் சீட்டுகளை விலைக்கு வாங்கியதற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது புகாரில் மேற்படி காணாமல் போன சீட்டுகளில் RSK என குறிப்பிட்டுள்ள விபரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் என்னை விசாரித்ததற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அடுத்தநாள் சம்பவ

இடத்திற்கு வந்து என்னை விசாரித்தார்கள். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், 5 நாட்கள் காலதாமதமாகத்தான் புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**